பொற்கரங்களாலே திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், N.E.C.C.- மூலமாக ஒரு புதிய முட்டை சேமிப்புக் கிடங்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு கிடங்குகளும் போதவில்லை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.*

திரு. கே.பி.பி. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

விட்டுமனைப் பட்டா

***20305—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வடக்கு தொகுதி, 6 மற்றும் 12—வது டிவிஷன்களிலுள்ள ஆதி திராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 12—வது டிவிஷன்

ஜான்சன்பேட்டையிலிருந்து அஸ்தம்பட்டி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை வரையுள்ள சேலம் நகர எல்லைக்குட்பட்ட புல எண் 102/1—ல், 3.40 ஏக்கர் நிலம் ஆதி திராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. ஜான்சன்பேட்டை பகுதியில் மனைப் பட்டா வழங்க வேண்டி 300—க்கும் அதிகமான நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். தகுதிவாய்ந்த பயனாளிகள் குறித்து ஆய்வு செய்த பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், 6—வது டிவிஷன், கோரிமேட்டிலிருந்து கொண்டப்பநாயக்கன்பட்டி சட்டக் கல்லூரி வரை உள்ளது. கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம், புல எண் 138/2—ல், 71 ஆதி திராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் வடக்கு தொகுதியிலே, 12—வது கோட்டத்திலே உள்ள காக்காயன் இடுகாட்டிற்கு அருகிலே இருக்கின்ற கோர்ட் ரோடு காலனிப் பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறக்குறைய 25, 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு மின்னிணைப்பு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் வசிக்கின்ற அந்த இடத்திற்குப் பட்டா வழங்க வேண்டி அவர்கள் பல ஆண்டுகளாக அரசிடம் கேட்டுவருகிறார்கள். எனவே, அவர்களுக்குப் பட்டா வழங்கக் கோருகிறேன்.

சேலம் 6—வது கோட்டத்திலே, கோம்பைப்பட்டி மாரியம்மன் கோயில் எதிரேயுள்ள கரட்டுப் புறம்போக்கிலே, அங்குள்ளவர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் மின்னிணைப்பு, வாக்காளர் அடையாள அட்டைகள், குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா கிடைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் 6—வது டிவிஷனிலிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி, கோரிக்கைகள் ஏதும் அரசிடம் தற்போது நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வீட்டுமனைப் பட்டா கோரி அரசுக்குக் கோரிக்கைகள் வந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—வது கோட்டத்திலே வாழ்ந்து வருகின்ற மக்களுக்குப் பட்டா எல்லாம் ready ஆகி, இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப்போலவே, 12—வது கோட்டத்திலே இருக்கின்ற கோர்ட் ரோடு காலனியிலேயும் பட்டா வழங்கிட பல ஆண்டுக் காலமாகக் கோரி வருகிறார்கள். இன்று நேற்றல்ல; பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆரணி வட்டம், மொழுகாம்பூண்டி, இரும்பேடு, ஆரணி நகரம் 28 மற்றும் 11—வது வட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புவாசிகளுக்கும் பட்டா வழங்கிட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 17]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் துறைமூலம் ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த மக்களுக்குத்தான் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட்டால், வருவாய்த் துறைமூலம் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை ஒப்படை, வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ், வரையறைக்குட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. நத்தம் புறம்போக்கு, தீர்வை ஏற்படாத புஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படாத நஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படுத்தப்பட்ட புஞ்சை நிலங்கள், தீர்வை ஏற்படுத்தப்பட்ட நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் போன்றவை வீட்டுமனை ஒப்படை செய்யத் தகுதியுடைய நிலங்களாகக் கருதப்படுகின்றன.

முற்பகல் 10-55

கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்கும் குறைவாக உள்ள வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கும் குறைவாக உள்ள வீடில்லாத ஏழைக் குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

ஆட்சேபகரமான புறம்போக்குகள் மற்றும் நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற இனங்களைத் தவிர்த்து, பிற ஒப்படை செய்யக்கூடிய நிலங்கள், தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைகளாக ஒப்படை செய்யப்படுகின்றன. ஆட்சேபகரமற்ற அரசு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி, ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருவோர்களின் ஆக்கிரமிப்புகள் வரன்முறை செய்யப்பட்டு, வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதில் எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும்

இராணுவப் படை உட்பட முப்படையில் பணிபுரிந்து, பணியில் இருக்கும்போது உயிர் இழந்தவர்கள் அல்லது உறுப்புகள் சேதமடைந்தோரின் குடும்பங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், முன்னாள் இராணுவத்தினர், வீடற்ற ஏழை மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதிலே, கோயில், தேவாலயம், மசூதி போன்ற வழிபாட்டுத் தலங்களைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுவதில்லை. சிற்றூராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஆட்சேபகரமான அரசு நிலங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுவதில்லை. பொது நலனுக்குத் தேவையில்லாத, சமுதாயத் தேவைக்கென்று ஒதுக்கப்பட்டு, தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உபயோகத்தில் இருந்து, அதில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டிக் குடியிருந்து, அதற்கான தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டும், அந்த நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையின் மாவட்ட மூத்த அலுவலர் (District Senior Officer) ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களை புலத் தணிக்கை செய்து, சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை அளித்துள்ள தீர்ப்புகளைக் கருத்தில்கொண்டும், உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்றும், தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரே வரன்முறைப்படுத்தலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2 கேள்விகளை அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) 2 கேள்விகளை அனுமதித்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இது வழக்கமல்ல. (குறுக்கீடு) மூலக் கேள்விக்கு 2 துணைக் கேள்விகளுக்குமேல் அனுமதிப்பது வழக்கமல்ல. விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை.

வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.